Tamil | தமிழ்

# தங்குநர்களைப் பாதுகாப்பாகவும் நலமாகவும் வைத்திருக்க எங்களுக்கு உதவுங்கள்

**தங்குநர்களின் ஆரோக்கியம் எங்களுடைய தலையாய முன்னுரிமை.**

வருடத்தின் ஒவ்வொரு நாளும் 24 மணிநேரமும் அவர்களுக்குத் தேவையான கவனிப்பையும் ஆதரவையும் அவர்கள் பெறுவதை உறுதி செய்வதில் நாங்கள் பற்றுறுதி கொண்டுள்ளோம்.

## 1

## இரவில் அல்லது வார இறுதியில் யாராவது நோய்வாய்ப்பட்டால் என்ன செய்வது?



- உதவி விரைவாகக் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்துவதற்கான நிறைய விருப்பத்தேர்வுகள் எங்களிடம் உள்ளன.
- எங்களிடம் ஒரு செவிலியர் இருக்கிறார், மேலும் மருத்துவர்கள், பிற செவிலியர்கள், மருந்தளிப்பாளர்கள், மருத்துவமனைகள் மற்றும் ஆம்புலன்ஸ் சேவை ஆகியவற்றிற்கான நேரடி இணைப்புகள் உள்ளன.
- பராமரிப்பு இல்லத்திற்குச் செல்வதற்காக மருத்துவர் காத்திருப்பதற்குப் பதிலாக உடனடி நிபுணர் ஆலோசனையைப் பெற "டெலிஹெல்த்" - தொலைபேசி மற்றும் வீடியோ அழைப்புகளை எம்மால் பயன்படுத்த முடியும்.
- அவசர சிகிச்சைப் பிரிவுக்கான பயணங்கள் மன உளைச்சலை ஏற்படுத்தலாம், அதனால் சாத்தியமான இடங்களில் மருத்துவர்களும் செவிலியர்களும் தங்கள் சொந்த அறைகளிலேயே நோய்வாய்ப்பட்டவர்களைக் கவனித்துக்கொள்வார்கள்.
- நீங்கள் அவசரகாலத் தொடர்பாளராகப் பட்டியலிடப்பட்டிருந்தால், கவலைக்கான காரணம் இருந்தால் நாங்கள் உங்களை அழைப்போம்.

phn NORTH WESTERN MELBOURNE
An Australian Government Initiative

Ambulance Victoria

Virtual Emergency Department

## 2

## உதவ நீங்கள் என்ன செய்யலாம்?



- தங்குநர்கள், பொது மருத்துவர் மற்றும் பிற தொடர்புகள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த எங்களுடன் பேசுங்கள். சேவைக்குப் பிந்தைய பராமரிப்புக்கான திட்டத்தை நாம் இணைவவாக எழுதலாம்.
- நீங்கள் ஒரு தங்குநரை சுகாதாரக் கவனிப்புக்காக அழைத்துச் சென்றால், தயவுசெய்து சிகிச்சைச் சுருக்கத்தைக் கேட்டு, நீங்கள் திரும்பி வரும்போது அதை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- தங்குநரிடம் முன்கூட்டிய பராமரிப்புத் திட்டம் ஒன்று இருந்தால் அல்லது அவர் சார்பாகச் செயல்பட யாரேனும் நியமிக்கப்பட்டிருந்தால், அந்த விவரங்கள் எங்களிடம் இருப்பதை உறுதிசெய்யவும்.

## 3

## உங்களால் வேறு என்ன செய்ய முடியும்?



- தங்குநரது விருப்பங்கள் மதிக்கப்படுவதை உறுதிசெய்ய ஒரு முன்கூட்டிய பராமரிப்பு திட்டத்தைப் பற்றி அவருடன் பேசுங்கள்.
- தேவைப்பட்டால், வழக்கறிஞரின் அதிகாரத்தை அமைப்பது அல்லது மருத்துவ சிகிச்சை குறித்த முடிவெடுப்பவரை நியமிப்பது பற்றி விவாதிக்கவும்.
- உங்களது தங்குநருக்கான சிறந்த அனைத்து வகையான பராமரிப்பையும் வழங்கத் தேவையான அனைத்து தகவல்களும் எங்களிடம் இருப்பதை உறுதிசெய்ய எங்களுடன் பேசுங்கள்.
- உங்களுக்குப் புதியதாக இருக்கக்கூடிய சில சிகிச்சை விருப்பத்தேர்வுகள் உள்ளன. விக்டோரியன் மெய்நிகர் அவசரநிலைத் (ved.vic.gov.au) இணையதளத்தைப் பார்த்து, “பராமரிப்பு இல்ல அணுகல் சேவைக” ளுக்கு ‘சுகாதாரத் திணைக்கள’ த்தின் வலைத்தளத்தில் (health.vic.gov.au) தேடவும்.